தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (10.07.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024-ல் ஈர்க்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் முதலீடுகளின் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தொழில் துறை செயலாளர் வி.அருண் ராய், அரசு செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உயர்கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி.க்கள் கூட பொருளாதார மந்த நிலையில் தவிப்பு!

கல்வித்துறையை பாழ்படுத்தி வருகிறது ஒன்றிய மோடி அரசு!

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி,ஜூலை 12-

மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, கல்வித்துறையை பாழ்படுத்தி வருவதாகவும், உயர்கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி.க்கள் கூட பொருளாதார மந்த நிலையில் தவிப்பதாகவும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்,

தற்போது நாட்டின் மிகவும் மதிப்புமிக்க ஐ.ஐ.டிகள் போன்ற உயரிய நிறுவனங்கள் கூட பொருளாதார மந்த நிலையின் மோசமான விளைவுகளை எதிர்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐ.ஐ.டிகளில் வேலை வாய்ப்புகளில் தொடர்ச்சியான சரிவு மற்றும் வருடாந்திர தொகுப்புகளின் சரிவு ஆகியவை தீவிர வேலையின்மையை எதிர்கொள்ளும் இளைஞர்களின் நிலையை மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாக ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022ம் ஆண்டில், 19 சதவீத மாணவர்களால், வளாக வேலை வாய்ப்பு பெற முடியவில்லை என்றும், நடப்பாண்டு இது 38 சதவீதமாக இரட்டிப்பாகி உள்ளதாகவும் கூறி யுள்ளார்.

நாட்டின் மிகவும் பிரபலமான மற்றும் மரியாதைக்குரிய கல்வி நிறுவனங்களின் நிலையே இதுவாக இருக்கும்போது, பிற கல்வி நிறுவனங்களின் நிலை என்னவாகும் என்பதை சிந்திக்க வேண்டியது அவசியம்? என்றும் ராகுல்காந்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய இளைஞர்கள் வேலையில்லா திண்டாட்டத்தால் முற்றிலுமாக சிதைந்து போயிருப்பதாகவும், முதலில் வேலை இல்லை, அவ்வாறு வேலை கிடைத்தாலும் சரியான வருமானம் இல்லை என்றும் ராகுல் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளை தொழிற் கல்வி கல்வியில் சேர்க்கவும், அந்த படிப்புகளுக்கு தயாராகவும் பெற்றோர்கள் லட்சக்கணக்கில் செலவழிப்பதாவும், மாணவர்கள் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி படிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் குறிப்பட்டுள்ள ராகுல்காந்தி, அதன் பிறகு அவர்களுக்கு வேலை கிடைக்காமலோ அல்லது, குறைந்த அளவு ஊதியத்தில் தான் வேலை கிடைப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். பா.ஜ.க.வின் மோசமான கொள்கைகள் மற்றும் கல்விக்கு எதிரான நோக்கத்தின் விளைவாகவே, இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளதாக ராகுல்காந்தி கூறியுள்ளார்.

இந்தியாவின் கடின உழைப்பாளிகளான இளைஞர்களை இந்த நெருக்கடியிலிருந்து விடுவிக்க மோடி அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், எதிர்க்கட்சியானது இளைஞர்களின் முழுப் பலத்துடன் குரல் எழுப்பி, அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு அரசாங்கத்தை பொறுப்பேற்கச் செய்யும் என்றும் ராகுல்காந்தி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வேலை வாங்கித் தருவதாக ரூபாய் 4.75 லட்சம் மோசடி!

பா.ஜ.க. மாநில பொறுப்பாளர் மீது வழக்குப் பதிவு!

சிவகங்கை. ஜூலை 12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனி வாசல் பகுதியை சேர்ந்தவர் கோபால் வயசு 66 .இவர் தனது மருமகளுக்காக நெய் வேலி என்.எல்.சி நிறுவனத்தில் வேலை வாங்கி தருமாறுசிவகங்கையில் உள்ள மாநில பா.ஜ.க ஓ.பி.சி அணி பொறுப்பாளர் ராஜேந்திரனை அணுகியுள்ளார்.

இதற்கு ராஜேந்திரன் ரூபாய் 20லட்சம் செலவாகும் என்றும் அதற்கான பணத்தை தருமாறு ராஜேந்திரன் கோபாலிடம் கூறி உள்ளார். கடந்த 2018ம் வருடம் வேலை வாங்கித் தருவதற்காக ராஜேந்திரனிடம் ரூபாய் 20லட்சத்து 49ஆயிரம் பணத்தை கோபால் தந்துள்ளார்.

6 வருடங்களுக்கு மேலாக வேலைவாங்கி தராமல் இருந்ததால் பணத்தை திருப்பி தருமாறு ராஜேந்திரனை கோபால் வற்புறுத்தி உள்ளார். இந்நிலையில் ராஜேந்திரன் ரூபாய் 15 லட்சத்து 75 ஆயிரம் கோபாலிடம் தந்துள்ளார்.

மீதித்தொகையான ரூபாய் 4 லட்சத்து 74 ஆயிரத்தை தராமல் ஏமாற்றி வந்துள்ளார். பணத்தை திருப்பி தருமாறு கோபால் ராஜேந்திரனிடம் கேட்டதற்கு அவர் சரியான பதில் கூறாமல் காலதாமதம் ஏற்படுத்தி உள்ளார்.

இதனால் மனவருத்தம் அடைந்த கோபால் சிவகங்கை இரண்டாவது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ராஜேந்திரன் தனக்கு தர வேண்டிய ரூபாய் நான்கு லட்சத்து 74 ஆயிரத்திணை ராஜேந்திரனிடம் பெற்று தருமாறு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி இது குறித்து மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் விசாரணை நடத்திட உத்திரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் சங்கிதா பா.ஜ.க. பிரமுகர் ராஜேந்திரன் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

திருப்பூர் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச்செல்வி ஏற்பாட்டில் ஆண்டிபாளையம் பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மகளிர்கள் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநில பிரச்சாரக் குழு நிர்வாகி செ.உமாமகேஸ்வரி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஆனந்தி, மாநகர அவைத் தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பகுதி கழகச் செயலாளர் பி.முருகசாமி, தலைமைக் கழக பேச்சாளர் ரஜினி செந்தில் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி தெற்கு மாவட்டம் மாநகர மலைக்கோட்டை பகுதி 13,13அ, சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு தெருமுனை கூட்டம் வடக்கு ஆண்டார் வீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மலைக்கோட்டை பகுதி கழகச் செயலாளர் மோகன் வரவேற்புரை ஆற்றினார்.வட்ட கழகச் செயலாளர் சங்கர், சரவணசெல்வன் தலைமை தாங்கினர்.இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்கள் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக செய்தி தொடர்பாளர் இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநகரகழக செயலாளரும் மண்டல தலைவருமான மு.மதி வாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர். மாமன்ற உறுப்பினர் மணிமேகலை நன்றியுரை ஆற்றினார்.

மு.மதிவாணன் - இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ.- மோகன் பங்கேற்பு!

மலைக்கோட்டையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா தெருமுனைக் கூட்டம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - தமிழன் பிரசன்னா சிறப்புரை!

திருச்சி, ஜூலை 12-

திருச்சி தெற்கு மாவட்டம் மாநகர மலைக்கோட்டை பகுதி 13,13அ, சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு தெருமுனை கூட்டம் வடக்கு ஆண்டார் வீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மலைக்கோட்டை பகுதி கழகச் செயலாளர் மோகன் வரவேற்புரை ஆற்றினார்.

வட்ட கழகச் செயலாளர் சங்கர், சரவணசெல்வன் தலைமை தாங்கினர். இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்கள் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக செய்தி தொடர்பாளர் இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநகர கழக செயலாளரும் மண்டல தலைவருமான மு.மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர். மாமன்ற உறுப்பினர் மணிமேகலை நன்றியுரை ஆற்றினார்.

கலைஞர் அவர்கள் இன்றும் நம்மை வழி நடத்துகிறார் என்பதற்காக தான் 2016 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை என்று வந்த பொழுது இந்த புதிய கல்விக் கொள்கையை நாம் ஏன் எதிர்க்க வேண்டும் என்று அவர் போட்ட அந்த விதைதான் இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் நம்முடைய மாநிலத்திற்கு என்று தனியாக ஒரு கல்விக் கொள்கையை ஒரு தனிநபர் ஆணையத்தின் மூலமாக இன்னைக்கு அந்த ஆவணத்தையும் இன்னைக்கு ஒரு பெற்றிருக்கின்றார். அது மட்டுமல்ல நுழைவுத் தேர்வு என்பதை இருக்கக்கூடாது என்பதை ஒழித்துக் கட்டியவர் கலைஞர்.

2006 ஆம் ஆண்டு அவர் கொண்டு வந்த காரணத்தால்தான் நம்முடைய பிள்ளைகள் எல்லாம் 12 ஆம் வகுப்பு பிள்ளைகள் எல்லாம் மருத்துவப் படிப்பாக இருந்தாலும் பொறியியல் கல்லூரி சேர்வதாக தான் அதுக்கு போதுமானது என்று சொன்னவர் கலைஞர் அவர்கள். அதனால் தான் இன்றைக்கு நீட் மாதிரி நுழைவுத் தேர்வு தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்தாலும் நமது சட்டமாக இருந்தாலும் இந்திய குற்றவியல் நடைமுறை சட்டமாக இருந்தாலும், இந்திய சாட்சிகள் சட்டமாக இருந்தாலும் சரி இதெல்லாம் மாத்துறாங்க. யாரு ஒன்றியத்துல இன்னைக்கு கூட்டணி ஆட்சி நடத்திட்டு இருக்காங்களே அவங்க மாத்துறாங்க. என்னமோ பேர்லாம் வைக்கிறாங்க. பாரதியார் நியாய சங்கீதாவா பாரதிய நாகரிக சுரக்ஷனா சங்கீதாவா பாரதிய சாட்சிகள் சட்டம் என்று இப்படி சாட்சிய சட்டம் அப்படின்னு நமக்கெல்லாம் புரியாத பெயரில் சட்டங்கள். மொழி திணிப்பு என்று வரும்போது அன்றைக்கும் இன்றைக்கும் முத்தமிழ் கலைஞர் தான் நம்ம வழிநடத்திக் கொண்டிருக்கின்றார். மொழி திணிப்பை என்றைக்கும் எதிர்ப்போம். அது இந்தியாக இருந்தாலும் சரி எந்த மொழியாக இருந்தாலும் சரி, அதை செய்து கொண்டிருக்கின்றோம் என்று சொன்னால் இன்றைக்கு நாம் குரல் கொடுக்கின்றோம் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அதற்கென்று ஒரு தனி நபர் ஆணையத்தை ஏற்படுத்தி இருக்கிறார் என்று சொன்னால் இன்றைக்கும் நம்மை வழி நடத்திக் கொண்டிருப்பவர் கலைஞர் அவர்கள் தான். அதற்காகத்தான் அவருக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று தெற்கு மாவட்டத்தின் சார்பாக 100 நிகழ்ச்சிகளை கடந்து அவருக்கு 101 வது பிறந்த நாளே வந்துருச்சு. ஆனால் நிறைவு விழா கூட்டத்தை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் இடையில் வந்த தேர்தலையொட்டி முன்கூட்டி இதெல்லாம் தள்ளி வைத்திருந்தது காரணமாகத்தான் ஆக அந்த விதத்தில் வருகை தந்திருக்கின்ற தாய்மார்கள் உங்களுக்கெல்லாம் இந்த நேரத்தை இந்தக் கூட்டத்தை பயன்படுத்திக்கொண்டு ஒட்டுமொத்த இந்தியாவிலேயே புதுச்சேரியும் சேர்த்து 40க்கு 40 ஒரு மாநிலம் வென்று இருக்கிறது ஒரு தலைவர் வென்று காட்டி இருக்கிறார் என்று சொன்னார் அந்த வெற்றியை தந்த என்னுடைய தாய்மார்கள் உங்கள் அனைவருக்கும் இந்த இடத்தில் இருந்து எங்களுடைய நன்றிகளை உங்கள் பாதத்தில் சமர்ப்பிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இங்கே இனிகோ அண்ணன் சொன்னது மாதிரி தான் வருகின்ற 2026 தேர்தலில் நம்முடைய தலைவர் சொல்லியிருக்கிறார் 234 தொகுதியில் 200 தொகுதிகளாவது குறைந்தபட்ச வெல்ல வேண்டும் என்று சொல்லி இருக்கிறார் ஏன் அதிலும் நூற்றுக்கு நூறு 234 தொகுதிகளிலும் வென்று காட்டுவோம் நம்முடைய தலைவருடைய கரத்தை வலுப்படுத்துவோம் உங்களோடு நாங்கள் இருக்கின்றோம் எங்களோடு நீங்கள் இருக்கிறீர்கள். யார் வந்தாலும் ஒரு கை பார்ப்போம். நீங்கள் இருக்கின்றபோது எங்களுக்கு என்ன கவலை என்று சொல்லி வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் நல்ல நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்றதை அனைத்துக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

சுதந்திர போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் 267 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மலர்தூவி மரியாதை செலுத்தி வணங்கினார். மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, தேவா, நிர்வாகிகள் பாஸ்கர் , சத்தியராஜ், வேலப்பன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.